1981 மார்ச் 5]

(இ) தற்போதுள்ள பணியாளர் நிலைக்கேற்ப மேலும் ஆறு கூடுதல் துணை வட்டாட்சியர் பதவிகள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் தக்க முடிவெடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கூடுதல் துணைத் தாசில்தார்கள் நியமனத்தை அரசு விரைவுபடுத்துமா ? மற்ற மாவட்டங்களிலே இருக்கும் விகிதாச்சாரத்துக்கு (Ratio) ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்திலும் தாசில்தார்கள் செயல்படும் அளவிற்கு நிலைமைகளை அரசு உறுதிப் படுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 200 துணைத் தாசில்தார்கள் மாநிலம் பூராவும் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆங்காங்கே இருக்கின்ற தேவைக்கேற்றவாறு, ஜனத்தொகைக் கேற்றவாறு, இருக்கின்ற வேலைப்பளு, வரி வசூல், எல்லாவற்றையும் கணக் கெடுத்து தமிழ் நாடு முழுவதற்கும் ஒரேமாதிரியான முறைதான் பின்பற்றப் படுகிறது.

உடற்பயிற்சி இயக்குநர்கள்.

* 113. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. பி. எட். பட்டம் பெற்ற உடற் பயிற்சி இயக்குநர்களை, மேல் உயர் நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) 1978-79, 1979-80 மற்றும் 1980-81 கல்வி ஆண்டுகளில், மேல் உயர் நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மேல்நிலைப் பள்ளி உடற் பயிற்சி இயக்குநர் பதவிக்கு பட்டப்படிப்போடு எம்.பி.எட். பயிற்சி பட்டம் B.A.|B.Sc.|B.Com. உடன் (M.P.Ed.) கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆதலின் பி.பி.எட். பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர் களை மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களாக நியமிப்பதற்கில்லை.

ஆனாலும், இவர்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் உடற்கல்வி பாடத்தை நடத்த அனுமதித்து அவர்களுக்கு தனி ஊதியமாக ரூ. 25 கொடுக்கப் படுகிறது.

(இ) 1979-80-ல் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி இயக்குநர்களை அமர்த்தும் பொருட்டு, 400 உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளாக உயர்த்தப்பட்டன. 1980-81-ம் ஆண்டில் 200 மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளில் பி. பி. எட். (B.P.Ed.) பட்டம் பெற்று ஆனால் சாதாரண உடற்பயிற்சி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதே உயர்நிலை—மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள் பி. பி. எட். (B.P.Ed.) பட்டம் பெற்றவர்கள் மாநிலம் முழுவதும் 25 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பி. பி.எட். (B.P.Ed.) பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே கேட்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மற்றொன்று, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்த 400 பணியிடங்களில் ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற உடற் கல்வி இயக்குநர்களில் எம்.பி.எட். (M.P.Ed.) பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. தற்போது பணியிலுள்ள எம். பி. எட். தகுதி படைத்தவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு அளிக்கப்படவில்லை என்று உடற்பயிற்சி ஆசிரியர்கள் சங்கம் முறையீடு செய்திருக்கிறார்கள். அதுகுறித்தும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அதுகுறித்து அரசு விசாரிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : இரண்டாம் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் கூட பி.பி.எட். (B.P.Ed.) பட்டம் தேறியிருக்கிறார்கள். அதேபோல தெப்பாசிரியர்கள் கூட பி. பி. எட். (B.P.Ed.) தகுதி பெற்று பள்ளிகளிலே

1981 மார்ச் 5]

பணியாற்றுகிறார்கள். இப்போது இருக்கும் 400 பணியிடங்களுக்கும் முழுமையாக நிரப்பப்படும்போது, இவர்களுக்கும் சலுகையளித்து நியமிக்கப் படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது தரப்பட்டிருக்கின்ற இந்தப் பணியிடங்களில் நியமிக்கப்படுவதற்கு எம். பி. எட். (M.P.Ed.) பட்டம் படித்திருக்கவேண்டும் என்ற தகுதியை நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே எம். பி. எட். பட்டம் படித்தவர்களை எடுத்தது போக மீதியுள்ள இடங்களுக்கு மேற்கொண்டு நாம் எடுக்கின்றபோது, இப்படிப்பட்டவர்களுடைய நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து அந்த இடங்களைப் பூர்த்தி செய்யலாம். அதுவும் பணியிடங்கள் இருப்பதைப் பொறுத்துதான் அந்த நிலைமை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அனைத்து மேல் நிலைப் பள்ளிகளிலும் உடற் கல்வி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா ? அப்படி நியமிக்கப் படாமலிருந்தால் அதற்காகக் கூடுதல் இட ஒதுக்கீடு செய்து அரசு நியமிக்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1979-80-ல் 400 பேரையும் 1980-81-ல் 200 பேரையும் நாம் நியமித்திருக்கிறோம். மீதி தேவையாக இருந்தால், அடுத்த ஆண்டில் போடலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிட்ட மேல் நிலைப் பள்ளி உடற் கல்வி ஆசிரியர்கள் நியமனத்தில் எம்.பி.எட். (M.P.Ed.) உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ. 600 என்ற அடிப்படைச் சம்பள வீதம் இருக்கிறது. ஆனால் அதே மேல் நிலைப் பள்ளிகளில் எம்.ஏ. பட்டம் பெற்று ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 675 அடிப்படைச் சம்பளம் என்ற வீதத்தில் இருக்கிறது. இப்படி முதுகலைப் பட்டம் பெற்ற வர்களிலேயே இரண்டுவிதமான பாகுபாடு இருக்கிறது. ஆகவே, எம்.பி.எட். (M.P.Ed.) பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்களுக்கும் ரூ. 675 அடிப்படைச் சம்பளம் கொடுக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுடைய தகுதியிலேயும், படிக்கின்ற கால அளவிலேயும் இருக்கின்ற வித்தியாசத்தின் அடிப்படை யிலேதான் இப்படி வைத்திருக்கிறோம். எம்.பி.எட். படிப்பு 1 வருடம், எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிப்பு இரண்டு வருடங்கள்.